இலங்கையில் மனிதாபிமான உதவிகள் மீதான தாக்குதல்கள் - 20 ஆண்டுகளின் பின்

"பல தடவைகள் நான் இறந்தேன்"

நிறைவேற்றுச் சுருக்கம்

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 48/141 ஆம் இலக்கத் தீர்மானம் மற்றும் மனித உரிமைகள் பேரவையின் 46/1, 51/1, 57/1 மற்றும் 60/1 ஆகிய தீர்மானங்களின் கீழ், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகருக்கு வழங்கப்பட்ட ஆணைக்கிணங்க வெளியிடப்படும் இந்த அறிக்கை, இலங்கையில் இடம்பெற்ற ஆயுத மோதலின்போது, குறிப்பாக 2006 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு மே மாதம் வரையான காலப்பகுதியில், மனிதாபிமானப் பணியாளர்கள், மருத்துவ மற்றும் மனிதாபிமான உதவிகளுக்கான உட்கட்டமைப்புகள், நிவாரண நடவடிக்கைகள் ஆகியவற்றின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களின் போக்கினை ஆவணப்படுத்துகின்றது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் (OHCHR) ஆவணக் களஞ்சியத்தில் தொகுக்கப்பட்ட தகவல்கள் மற்றும் ஆதாரங்களையும், 2005 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் மோதல்களால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மனிதாபிமான நடவடிக்கைகளிலும் மருத்துவ சேவைகளை வழங்குவதிலும் ஈடுபட்டிருந்த 16 நபர்களுடன் மேற்கொள்ளப்பட்ட கலந்தாலோசனைகளையும் அடிப்படையாகக் கொண்டு, மனிதாபிமானப் பணியாளர்கள் மற்றும் மனிதாபிமானப் பயன்பாட்டிற்கான கட்டமைப்புகள் மீதான தாக்குதல்கள், மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கான அணுகல் மீதான கட்டுப்பாடுகள் மற்றும் அத்தியாவசிய உதவிகள் மறுக்கப்பட்டமை ஆகியவை தனித்தனியான சம்பவங்களாகவோ அல்லது போர் நடவடிக்கைகளின் தற்செயலான விளைவுகளாகவோ இடம்பெற்றவையல்ல என்பதை இந்த அறிக்கை கண்டறிந்துள்ளது. மாறாக, இவை மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கான ஆற்றலைப் படிப்படியாகச் சிதைத்து, பொதுமக்களின் துயரங்களை மேலும் தீவிரப்படுத்தி, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உயிர்காக்கும் உதவிகளும் பாதுகாப்பும் கிடைக்காமல் செய்யப்பட்ட தொடர்ச்சியான ஒரு போக்கின் பகுதியாக அமைந்திருந்தன. சமகால ஆயுத மோதலொன்றில் மனிதாபிமானப் பாதுகாப்பின் மிக மோசமான வீழ்ச்சிகளில் ஒன்றாகப் பதிவுசெய்யப்பட்ட இது வழிவகுத்தது. இரண்டு தசாப்தங்கள் கடந்த பின்னரும், சர்வதேச சட்டத்தின் இத்தகைய பாரதூரமான மீறல்களுக்கான பொறுப்புக்கூறல் பெருமளவில் உறுதிசெய்யப்படாமலேயே உள்ளது. தொடர்ந்து நிலவும் இந்தத் தண்டனையிலிருந்து விலக்களிக்கப்படும் நிலை, கொல்லப்பட்ட மற்றும் காயமடைந்தவர்களின் குடும்பங்களையும், உயிர்தப்பிய அவர்களது சக பணியாளர்களையும் தொடர்ந்தும் பாதித்து வருகின்றதுடன், அவர்களுக்கு உரிய அங்கீகாரமோ அல்லது பரிகாரமோ இதுவரை கிடைக்கப்பெறவில்லை.

தற்போதைய சூழலில், குறிப்பாக, இலங்கையின் கடந்தகால நிகழ்வுகள் முக்கியத்துவம் பெறுகின்றன. மனிதாபிமானப் பணியாளர்கள், உட்கட்டமைப்புகள் மற்றும் மனிதாபிமான

நடவடிக்கைகள் மீதான தாக்குதல்களும், மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கான அணுகல் மறுக்கப்படுதல் அல்லது கட்டுப்படுத்தப்படுதல் ஆகியவையும் சமகால ஆயுத மோதல்களின் முக்கிய பண்புகளாக மாறியுள்ளன. 2023 ஆம் ஆண்டு முதல் 2025 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 1,010 இற்கும் மேற்பட்ட மனிதாபிமானப் பணியாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர்; இது அதற்கு முந்தைய மூன்று ஆண்டுகளில் பதிவுசெய்யப்பட்ட எண்ணிக்கையினை விட ஏறத்தாழ மூன்று மடங்காகும். நிறுவனங்களுக்கிடையிலான நிரந்தரக் குழு (Inter-Agency Standing Committee), தற்போதைய காலப்பகுதியைத் "தண்டனையிலிருந்து விலக்களிக்கப்படும் யுகம்" என விவரித்துள்ளது. இந்த அறிக்கைக்காகக் கலந்தாலோசிக்கப்பட்ட பலர், எவ்விதத் தூண்டுதலுமின்றி, தாமாகவே, இலங்கையில் இடம்பெற்ற ஆயுத மோதலுக்கும் சமகாலத்தில் இடம்பெறும் ஏனைய ஆயுத மோதல்களுக்கும் இடையிலான ஒற்றுமைகளை குறிப்பிடத்தக்க அளவில் ஒத்த கருத்துக்களுடன் முன்வைத்ததுடன், போருக்குப் பின்னர் இலங்கையில் நிலவிய தண்டனையிலிருந்து விலக்களிக்கப்படும் நிலையானது, ஏனைய இடங்களிலும் இத்தகைய மீறல்களைப் புரிபவர்களுக்குத் துணிச்சல் அளிக்கும் ஒரு முன்னுதாரணமாக அமைந்துள்ளதாகவும் விவரித்தனர்.

பின்னணிச் சூழல்

மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கான அணுகல் மீதான கட்டுப்பாடுகள், ஆயுத மோதலின் இறுதிக்கட்டத்திற்கு முன்பிருந்தே நடைமுறையில் இருந்ததுடன், மோதலில் ஈடுபட்ட அனைத்துத் தரப்பினராலும் வெவ்வேறு வடிவங்களில் விதிக்கப்பட்டிருந்தன. தொடர்ச்சியாக ஆட்சியிலிருந்த அரசாங்கங்கள், தமிழீழ விடுதலைப் புலிகளின் (LTTE) கட்டுப்பாட்டிலிருந்த பகுதிகளுக்கு அத்தியாவசியப் பொருட்களைக் கொண்டு செல்வதற்கும் மனிதாபிமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் கட்டுப்பாடுகளை விதித்திருந்த அதேவேளை, மனிதாபிமான அமைப்புகள் மீதான கண்காணிப்பு நடவடிக்கைகள், தன்னிச்சையான சோதனைகள், சோதனைச் சாவடிகளில் ஏற்படுத்தப்பட்ட தாமதங்கள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் விநியோகம் மீதான கட்டுப்பாடுகள் ஆகியவற்றை எதிர்கொண்டன. தமிழீழ விடுதலைப் புலிகளும் தமது அனுமதிச்சீட்டு முறைமை உள்ளிட்ட வழிமுறைகளினூடாக பொதுமக்கள் மற்றும் மனிதாபிமானப் பணியாளர்களின் நடமாட்டத்திற்குக் கட்டுப்பாடுகளை விதித்திருந்தனர். இத்தகைய நடவடிக்கைகள் மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கான ஆற்றலைப் படிப்படியாகப் பலவீனப்படுத்தியதுடன், பொதுமக்கள் பாதிப்புகளுக்கு உள்ளாகக்கூடிய நிலையை மேலும் அதிகரித்தன. பாரிய இராணுவத் தாக்குதல் நடவடிக்கையொன்றை எதிர்கொள்வதற்குத் தேவையான தயார்நிலையிலும் ஆற்றலிலும் மனிதாபிமான உதவி நடவடிக்கைகள் இல்லை என, 2006 ஆம் ஆண்டிற்கு முன்னரே, ஐக்கிய நாடுகள் சபையின் மதிப்பீடுகள் எச்சரித்திருந்தன.

2006 ஆம் ஆண்டு முதல், இக்கட்டுப்பாடுகள் தீவிரமடைந்து, மனிதாபிமானப் பணியாளர்கள் மற்றும் உட்கட்டமைப்புகள் மீதான நேரடித் தாக்குதல்களாக உருவெடுத்தன. உள்ளூர் அமைப்புகள், குறிப்பாகத் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் இயங்கிய அமைப்புகள் மீதான கண்காணிப்பு நடவடிக்கைகள், சொத்துக்கள் முடக்கப்படுதல் மற்றும் தடைசெய்யப்படுதல் ஆகியவற்றையும் எதிர்கொண்ட அதேவேளை, மனிதாபிமானப் பணியாளர்களைத் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களாகச் சித்தரித்த உத்தியோகபூர்வமான கருத்தாடல்கள் அவர்களின் பாதுகாப்பை மேலும் பலவீனப்படுத்தின. 2008 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதத்தில், ஐக்கிய நாடுகள் சபையின் முகவர்

அமைப்புகளையும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களையும் வன்னிப் பகுதியிலிருந்து வெளியேறுமாறு அரசாங்கம் உத்தரவிட்டமை ஒரு தீர்க்கமான திருப்புமுனையாக அமைந்தது. இதனைத் தொடர்ந்து சர்வதேசப் பணியாளர்கள் வெளியேறியமையும், 2009 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் குழு (ICRC) தரைவழியாக மேற்கொண்டுவந்த நடவடிக்கைகளிலிருந்து விலகியமையும், மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கான அணுகலைக் கடுமையாகக் குறைத்ததுடன், பாதுகாப்பு வழங்குவதிலும் நிலைமைகளைக் கண்காணிப்பதிலும் முக்கிய பங்காற்றிய தரப்பினரின் பிரசன்னத்தையும் இல்லாமற் செய்தன.

இறுதிக்கட்ட இராணுவத் தாக்குதல் நடவடிக்கையின்போது, மருத்துவ நிலையங்கள் மீதான தாக்குதல்கள் தீவிரமடைந்தன. உணவு மற்றும் மருத்துவப் பொருட்களின் விநியோகம் மீதான கட்டுப்பாடுகளும் மேலும் தீவிரமடைந்ததுடன், வழங்கப்பட்ட பொருட்களின் அளவு மதிப்பிடப்பட்ட தேவைகளைவிட மிகக் குறைவாகவே இருந்தது. அத்தியாவசிய மருந்துகள் மற்றும் சத்திரசிகிச்சை உபகரணங்களின் கடுமையான பற்றாக்குறை மருத்துவச் சிகிச்சைகளை வழங்குவதற்கான ஆற்றலைப் பாதித்த அதேவேளை, போசாக்கின்மையும் பட்டினியும் மிகவும் ஆபத்தான நிலையை எட்டியிருந்தன. இறுதி வாரங்களில், தொடர்ச்சியான எறிகணைத் தாக்குதல்களுக்கு மத்தியில் குறுகிய கரையோர நிலப்பரப்பிற்குள் சிக்கியிருந்த பொதுமக்களுக்கு மனிதாபிமான உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகள் ஏறத்தாழ முற்றாக இல்லாமற்போயிருந்ததுடன், இறுதியாக இயங்கிக்கொண்டிருந்த மருத்துவமனையும் தனது செயற்பாடுகளை நிறுத்தியிருந்தது.

2006 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29 மற்றும் 30 ஆம் திகதிகளில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் (TRO) பணியாளர்கள் காணாமலாக்கப்பட்டமை; 2006 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்தில் மூதூரில் அக்ஷன் கொன்ட்ர் லா ஃபெம் (Action Contre la Faim – ACF) அமைப்பின் 17 பணியாளர்கள் படுகொலை செய்யப்பட்டமை; 2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் "11 ஆவது நிவாரணத் தொடரணி" (Convoy 11) மீது எறிகணைத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டமையும் அதன் நடவடிக்கைகளுக்குத் தடைகள் ஏற்படுத்தப்பட்டமையும்; மற்றும் 2009 ஆம் ஆண்டு ஜனவரி முதல் பெப்ரவரி மாதம் வரையான காலப்பகுதியில் புதுக்குடியிருப்பு (PTK) மருத்துவமனை மீது மேற்கொள்ளப்பட்ட எறிகணைத் தாக்குதல்கள் ஆகிய நான்கு முக்கிய சம்பவங்களை இந்த அறிக்கை விரிவாக ஆராய்கின்றது. இவற்றில் எந்தவொரு சம்பவம் தொடர்பிலும் இதுவரை எந்தவொரு தனிநபரும் குற்றவியல் ரீதியாகப் பொறுப்புக்கூற வைக்கப்படவில்லை. பொதுமக்கள் தங்கியிருந்த இடங்கள் மற்றும் அவர்களின் மனிதாபிமானத் தேவைகள் குறித்து அரசாங்கம் அறிந்திருந்த போதிலும், பொதுமக்களையும் மனிதாபிமான நிவாரண உதவிகளையும் பாதிக்கும் வகையிலான தாக்குதல்கள், கட்டுப்பாடுகள் மற்றும் அத்தியாவசிய உதவிகள் மறுக்கப்பட்ட சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என்பதை கிடைக்கப்பெற்றுள்ள ஆதாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன. மருத்துவ மற்றும் மனிதாபிமானப் பயன்பாட்டிற்கான கட்டமைப்புகள் மீதான தாக்குதல்கள், மனிதாபிமான நிவாரண உதவிகளை மறுப்பதன் மூலம் பொதுமக்களைப் பட்டினிக்கு உள்ளாக்கியமை உள்ளிட்ட போர்க்குற்றங்களை அரசாங்கப் படையினர் புரிந்துள்ளதாக நம்பத்தகுந்த குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன என ஐக்கிய நாடுகள் பொதுச் செயலாளரின் நிபுணர்கள் குழு கண்டறிந்த அதேவேளை, மோதலில் ஈடுபட்ட அனைத்துத் தரப்பினராலும் புரியப்பட்ட பல பாரதூரமான மீறல்கள் போர்க்குற்றங்களாக அமையக்கூடும் என நம்புவதற்கு நியாயமான அடிப்படைகள் உள்ளதாக இலங்கை தொடர்பான ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் விசாரணை அறிக்கை (OISL) கண்டறிந்துள்ளது.

எனினும், பல ஆண்டுகளாக விரிவான ஆவணப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ள போதிலும், அர்த்தமுள்ள பொறுப்புக்கூறல் நடவடிக்கைகள் இதுவரை முன்னெடுக்கப்படாதமை, அரச பொறுப்பை மறுத்தல், பயனற்ற விசாரணைகள் மற்றும் பயனற்ற குற்றவியல் வழக்குத் தொடரல் நடவடிக்கைகள், பாதிக்கப்பட்டவர்களுக்கும் சாட்சிகளுக்கும் போதிய பாதுகாப்பு வழங்கப்படாமை மற்றும் குற்றவியல் பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதற்குப் பதிலாக விசாரணை ஆணைக்குழுக்களை நம்பியிருத்தல் உள்ளிட்ட, தண்டனையிலிருந்து விலக்களிக்கப்படும் நிலை தொடர்வதற்குக் காரணமான அம்சங்களை இந்த அறிக்கையில் ஆராயப்பட்ட சம்பவங்கள் வெளிப்படுத்துகின்றன.

இந்த அறிக்கை, ஐக்கிய நாடுகள் சபையின் சொந்த நடவடிக்கைகளையும் ஆராய்கின்றது. தனிப்பட்ட பணியாளர்கள் துணிச்சலுடன் செயற்பட்டிருந்த போதிலும், பொதுமக்களைப் பாதுகாத்தல், முன்கூட்டிய எச்சரிக்கைகளுக்குப் பதிலளித்தல் மற்றும் மனிதாபிமானக் கோட்பாடுகளுக்கும் மனித உரிமைக் கோட்பாடுகளுக்கும் அமைவான நடவடிக்கைகளை உறுதிசெய்தல் ஆகியவற்றில் ஐக்கிய நாடுகள் சபை தனது பொறுப்புகளை நிறைவேற்றத் தவறியுள்ளதாக ஐக்கிய நாடுகள் பொதுச் செயலாளரின் உள்ளக மீளாய்வுக் குழு கண்டறிந்திருந்ததை இந்த அறிக்கை நினைவுபடுத்துகின்றது. எனினும், இத்தகைய தவறுகள், பாரதூரமான மீறல்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்கும் குற்றவியல் வழக்குகளைத் தொடர்வதற்கும் அரசுக்கு உள்ள முதன்மைப் பொறுப்பை எவ்வகையிலும் குறைப்பதில்லை.

மனிதாபிமானப் பணியாளர்களின் குரல்கள்

மேற்கொள்ளப்பட்ட கலந்தாலோசனைகள், ஆயுத மோதலின் இறுதிக்கட்டம் மற்றும் அதன் நீண்டகால விளைவுகள் தொடர்பில் குறிப்பிடத்தக்க அளவில் ஒத்துப்போகும் அனுபவப் பதிவுகளை வெளிப்படுத்தின. மனிதாபிமானப் பணிகளில் ஈடுபட்டமையே சந்தேகத்திற்கும் அச்சுறுத்தல்களுக்கும் உள்ளாவதற்கான காரணமாக மாறியிருந்ததுடன், குறிப்பாக உள்நாட்டுப் பணியாளர்கள் இத்தகைய ஆபத்துகளுக்கு அதிகளவில் உள்ளாகியிருந்ததாகக் கலந்தாலோசிக்கப்பட்டவர்கள் விவரித்தனர். 2008 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதத்தில் சர்வதேச அமைப்புகள் வெளியேறியமை, பொதுமக்களுக்கு மனிதாபிமான உதவிகள் கிடைக்காமல் செய்தது மட்டுமன்றி, இடம்பெற்ற மீறல்களை நேரடியாகக் கண்டறிந்து ஆவணப்படுத்தக்கூடிய சர்வதேசத்தின் பிரசன்னத்தையும் இல்லாமற் செய்த ஒரு தீர்க்கமான திருப்புமுனையாக அமைந்ததாக அவர்கள் சுட்டிக்காட்டினர்.

மோதல் இடம்பெற்ற பகுதிக்குள் சிக்கியிருந்த பொதுமக்களின் வாழ்க்கை நிலைமைகள் மேலும் மேலும் தாங்கிக்கொள்ள முடியாத அளவிற்கு மோசமடைந்தமைக்கு, மனிதாபிமான உதவிகள் படிப்படியாகக் கட்டுப்படுத்தப்பட்டமையும், அவை திட்டமிட்ட வகையில் கையாளப்பட்டமையும் காரணமாக அமைந்ததாகப் பலர் விவரித்தனர். அத்தியாவசிய மருத்துவப் பொருட்களின் பற்றாக்குறைக்கு மத்தியில், மிக அதிக எண்ணிக்கையிலான காயமடைந்த மற்றும் ஆபத்தான நிலையில் இருந்த நோயாளர்களுக்குச் சிகிச்சையளிக்க வேண்டியிருந்தமை, பல சந்தர்ப்பங்களில் உயிர்காக்கும் சிகிச்சைகளை வழங்க முடியாத நிலைமை ஆகியவற்றை மருத்துவப் பணியாளர்கள் நினைவுகூர்ந்தனர். மனிதாபிமானப் பணியாளர்கள் தாம் அனுபவித்த ஆழமான இயலாமை உணர்வைப் பற்றியும், அதேவேளை தாம் நேரடியாக அனுபவித்த சம்பவங்களுக்குச் சாட்சியமளிக்க வேண்டிய நீடித்த பொறுப்புணர்வு குறித்தும் தெரிவித்தனர். பலருக்கு, உண்மை, அங்கீகாரம் மற்றும் பொறுப்புக்கூறலைப்

பெற்றுக்கொள்வதற்காகப் பல ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் பலனளிக்காமற்போனமை, அவர்கள் அனுபவித்த உளவியல் அதிர்ச்சிகளையும் மனவேதனைகளையும் மேலும் தீவிரப்படுத்தியுள்ளதுடன், அவை இன்றுவரை நீடித்து வருகின்றன. தொடர்ந்து நிலவும் தண்டனையிலிருந்து விலக்களிக்கப்படும் நிலை, பாதிக்கப்பட்டவர்களுக்கு அங்கீகாரம், உண்மை மற்றும் இழப்பீடு கிடைக்கப்படாமல் செய்துள்ள அதேவேளை, இத்தகைய மீறல்களுக்குத் தீர்வு காணத் தவறுவது, அவை ஏனைய இடங்களிலும் மீண்டும் இடம்பெறுவதற்கான ஆபத்தை ஏற்படுத்தக்கூடும் என்ற கவலைகளையும் மேலும் வலுப்படுத்துகின்றது.

முடிவுரையும் பரிந்துரைகளும்

இந்த அறிக்கை வெளியிடப்படுவதற்கு முன்னதாகவே, இது தொடர்பில் கருத்துத் தெரிவிப்பதற்கான வாய்ப்பை வழங்கும் வகையில் இலங்கை அரசாங்கத்துடன் பகிரப்பட்டிருந்த போதிலும், அறிக்கை வெளியிடப்படும் வரை அரசாங்கத்திடமிருந்து எந்தவொரு பதிலும் கிடைக்கப்பெறவில்லை.

மனிதாபிமான மற்றும் மருத்துவப் பணியாளர்கள், நிலையங்கள் மற்றும் நடவடிக்கைகள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள், அரச பாதுகாப்புப் படையினர் சம்பந்தப்பட்ட தாக்குதல்கள் உட்பட, அனைத்துத் தாக்குதல்களையும் அரசு உத்தியோகபூர்வமாக அங்கீகரித்தல், பகிரங்க மன்னிப்புக் கோருதல் மற்றும் கொல்லப்பட்ட அல்லது காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கும் உயிர்தப்பிய சக பணியாளர்களுக்கும் போதுமானதும் விரிவானதுமான இழப்பீடுகள் மற்றும் பரிகாரங்களை வழங்குதல் ஆகியவற்றை ஆரம்ப நடவடிக்கைகளாகக் கொண்டு, உண்மையைக் கண்டறிதல், பொறுப்புக்கூறலை உறுதிசெய்தல் மற்றும் இத்தகைய மீறல்கள் மீண்டும் இடம்பெறாமையினை உறுதிப்படுத்துதல் ஆகியவற்றில் தெளிவான அர்ப்பணிப்பை வெளிப்படுத்துமாறு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகம் (OHCHR) அழைப்பு விடுக்கின்றது.

துரிதமான, சுயாதீனமான மற்றும் பக்கச்சார்பற்ற விசாரணைகள், தனிப்பட்ட சம்பவங்களை மட்டுமன்றி, மனிதாபிமானப் பணியாளர்கள் மற்றும் அமைப்புகள் மீதான தாக்குதல்களும் மனிதாபிமான உதவிகள் மீதான கட்டுப்பாடுகளும் ஒரு பரந்த கொள்கை அல்லது திட்டத்தின் பகுதியாக அமைந்திருந்தனவா என்பது பற்றியும் ஆராயப்பட வேண்டும். இதற்காக, குற்றவியல் வழக்குத் தொடரும் நிறுவனங்களின் சுயாதீனத் தன்மையினையும் ஆற்றலையும் வலுப்படுத்துதல், சுயாதீனமான குற்றவியல் வழக்குத் தொடரல் பொறிமுறையொன்றை நிறுவுதல், போர்க்குற்றங்கள் மற்றும் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களை உள்நாட்டுச் சட்டங்களில் உள்ளடக்குதல் மற்றும் ரோம் சட்டவிதி (Rome Statute) உள்ளிட்ட தொடர்புடைய சர்வதேச சட்ட ஆவணங்களில் இணைந்துகொள்ளுதல் ஆகிய நடவடிக்கைகள் அவசியமாகின்றன.

பாதுகாப்புத் துறையில் சீர்திருத்தங்களை மேற்கொள்ளுதல், பாரதூரமான மீறல்களில் சம்பந்தப்பட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள பணியாளர்களின் பின்னணியை உரிய முறையில் ஆராய்ந்து மதிப்பீடு செய்வதை உறுதிசெய்தல், பாதிக்கப்பட்டவர்களுக்கும் சாட்சிகளுக்கும் பயனுள்ளதும் சுயாதீனமானதுமான பாதுகாப்பை வலுப்படுத்துதல் மற்றும் பாதிக்கப்பட்டவர்கள், அவர்களது குடும்பத்தினர், மனித உரிமைகள் பாதுகாவலர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு எதிரான கண்காணிப்பு நடவடிக்கைகள், அச்சுறுத்தல்கள் மற்றும் பழிவாங்கும் நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தல் ஆகியவற்றினூடாக, இத்தகைய

மீறல்கள் மீண்டும் இடம்பெறுவதைத் தடுப்பதற்கான உறுதியான நடவடிக்கைகளையும் அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும்.

தொடர்ச்சியான சர்வதேசக் கண்காணிப்பை மேற்கொள்ளுமாறும், உள்நாட்டில் மேற்கொள்ளப்படும் முயற்சிகள் போதுமானதாக அமையாத சந்தர்ப்பங்களில், சர்வதேச விசாரணைகள், குற்றவியல் வழக்குத் தொடரல் நடவடிக்கைகள், குறிப்பிட்ட இலக்குகளைக் கொண்ட தடைகள் மற்றும் இலங்கைப் பாதுகாப்புப் படையினரின் மனித உரிமைகள் தொடர்பான பின்னணியைத் தீவிரமாக ஆராய்ந்து மதிப்பீடு செய்தல் ஆகியவற்றினூடாக பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதற்கு ஆதரவளிக்குமாறும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகம் (OHCHR) பரிந்துரைக்கின்றது. இலங்கையில் மனிதாபிமான நடவடிக்கைகள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களுக்கான பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதற்கான முயற்சிகள், ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் 2730 (2024) ஆம் இலக்கத் தீர்மானம் மற்றும் மனிதாபிமானப் பணியாளர்களைப் பாதுகாப்பதற்கான 2025 ஆம் ஆண்டுப் பிரகடனம் ஆகியவற்றின் கீழ் முன்னெடுக்கப்படும் முயற்சிகள் உட்பட, இத்தகைய மீறல்களுக்குப் பதிலளிப்பதற்கான பரந்த சர்வதேச நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக அமைய வேண்டியதுடன், இலங்கையில் காணப்பட்ட தண்டனையிலிருந்து விலக்களிக்கப்படும் நிலையானது ஏனைய ஆயுத மோதல்களுக்கு ஒரு முன்னுதாரணமாக அமைவதனைத் தடுப்பதற்கும் பங்களிக்க வேண்டும்.